

06.11.2026

தலைப்புச் செய்திகள்

1. நாடுமுழுவதும் தந்தேராஸ் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அனைவரது வாழ்விலும், ஆரோக்கியம், மகிழ்ச்சி, அமைதி பெருகட்டும் என குடியரசு துணைதலைவரும், பிரதமரும் வாழ்த்தியுள்ளனர்.

2. இந்தியா ருவாண்டா இடையே புதுப்பிக்கதக்க எரிசக்தி துறையில் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என இத்துறைக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தொிவித்துள்ளாா்.

3. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 61ஆவது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

4. தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தொிவித்துள்ளது.

5. சென்னை ஓப்பன் டென்னிஸ் மகளிா் ஒற்றையர் காலிறுதியில் ராஜேஸ்வரன் ரேவதி இன்று களமிறங்கிறாா்.

இனி விரிவான செய்திகள்

****

தந்தேராஸ்

நாடுமுழுவதும் தந்தேராஸ் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தொிவித்துள்ளனர்.

இந்நன்நாளில் தன்வந்த்ரி பகவானின் அருளால் அனைவரது வாழ்விலும், மகிழ்ச்சி, ஆரோக்கியம், அமைதி, செழிப்பு பெருகட்டும் என வாழ்த்தியுள்ளனர்..

****

பிரல்ஹாத் ஜோஷி

புதுப்பிக்கதக்க எரிசக்தி துறையில் இந்தியா ருவாண்டா இடையிலான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என இத்துறைக்கான அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தொிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச சூரிய ஆற்றல் ஒத்துழைப்பு மாநாட்டில் மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத சூரிய ஆற்றல் அமைப்புகளை விவசாய நீர்பாசனம், குளிர்சாதன கிடங்குகள், வேளாண் விளைபொருள் பதப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு பயன்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் தமது சமூக வலைதள பதவில் குறிப்பிட்டுள்ளார்.

****

கப்பல்

இந்திய கடற்படையில் அமினி நீர்மூழ்கி போர் கப்பல் இன்று இணைக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் அல்லாத பகுதிகளில் பயன்படுத்தப்படும் நீர் மூழ்கி கப்பல்களை எதிர்த்து போரிடும் வகையில் இக்கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சுய சார்பு இந்தியா இலக்கை எட்டும் வகையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ராக்கெட் ஏவுதளங்கள், மற்றும் சோனார் கருவிகளை கொண்டுள்ள இந்த கப்பல் நீருக்கு அடியில் ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன்கொண்டது.

கடற்கரை கண்காணிப்பை இந்த போர் கப்பல் மேலும் வலுப்படுத்தும் எனவும், உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் உற்பத்தி துறையின் வளர்ச்சியை இந்த கப்பல் உலகிற்கு பறைசாற்றும் எனவும் பாதுகாப்பு அமைச்சகம் தொிவித்துள்ளது.

****

இந்தியா - மியான்மர்

இந்தியா மியான்மர் கூட்டு பேரிடர் மீட்பு பயிற்சி ராஹத் மித்ரா சென்னையில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் இந்திய கடற்படை மற்றும் விமானபடையுடன் இணைந்து செயல்பட்ட ராணுவத்தினர், வெள்ள நிவாரண பிரிவுகள் மற்றும் பொறியாளர் பணிக்குழுக்களின் திறன்களை செயல் விளக்கங்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

இதில் மீட்பு பணிகள், தேங்கிய நீரை வெளியேற்றுதல், போக்குவரத்து தொடர்பை மீட்டெடுத்தல், தற்காலிக பாலங்களை அமைத்தல் போன்ற செயல்பாடுகள் இடம்பெற்றன.

****

செங்கல்பட்டு - தீபாவளி

தீபாவளி பண்டிகை நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ள நிலையில் தமிழகம் முழுவதும் பட்டாசு, ஜவுளி, இனிப்புகள் விற்பனை களைகட்டியுள்ளன.

சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்கு இன்று அதிகாலை முதலே வாகனங்கள் செல்ல தொடங்கியுள்ளன.

ஆத்தூர் சுங்கச்சாவடியில் 3 கிலோ மீட்டர் தூரம் வரை வாகனங்கள் அணிவகுத்து செல்வதாகவும், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் எமது செங்கல்பட்டு செய்தியாளர் தொிவிக்கிறாா்.

வாய்ஸ்

****

ஆடு விற்பனை

தீபாவளி பண்டிகையை ஒட்டி ஆடுகள் விற்பனையும் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

ராணிப்பேட்டை வார சந்தையில் 4 கோடி ரூபாய் அளவிற்கும்,

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே செம்பட்டியில் 2 கோடி ரூபாய்க்கும், ஆடுகள் விற்பனை ஆகியுள்ளன.

மதுரை திருமங்கலம் ஆட்டு சந்தை தொடங்கிய சில மணி நேரங்களிலேயே 7 கோடி ரூபாய் மதிப்பிலான ஆடுகள் விற்பனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறாா்.

வாய்ஸ்

****

தீபாவளி இருவாி

தீபாவளி பண்டிகையை ஒட்டி தமிழகம் முழுவதும் இன்று அனைத்து நியாயவிலைக்கடைகளும் இன்று செயல்படுகின்றன.

வரும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தை ஒட்டி குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசிய பொருட்களை பெற ஏதுவாக இந்நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

கடலூர் மாவட்டம் விருதாச்சலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தீ விபத்தில்லா தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சி தீயணைப்புத்துறை சாாா்பில் இன்று நடைபெற்றது.

200க்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் பங்கேற்ற இந்நிகழ்வில் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

****

காவிரி நீர் மேலாண்மை ஆணையம்

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 61ஆவது கூட்டம் அதன் தலைவர் திரு.எஸ்.கே. ஹல்தர் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

காவிரியிலிருந்து மேற்கொண்டு கர்நாடகம் தமிழகத்திற்கு நீர் திறப்பது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

****

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கன மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 8 ஆயிரத்து 237 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 57.79 அடியாகும்.

டெல்டா பாசனத்திற்காக ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக அதிகாித்துள்ளதால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி பரிசல் இயக்க மாவட்ட நிாா்வாகம் தடைவிதித்துள்ளதாக எமது தர்மபுரி செய்தியாளர் தொிவிக்கிறாாா்.

வாய்ஸ்

****

ஆனந்த்

திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் நரியம்பாடி அல்லியந்தல் கிராமங்களில், கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடங்களை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.ஆனந்த் இன்று திறந்துவைத்தாா்.

அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 33 லட்ச ரூபாய் மதிப்பில் இக்கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

****

தென்னரசு

காஞ்சிபுரம் மேல் சிறுணை ஊராட்சிக்கு புதிய போக்குவரத்து வழிதடத்தை மாநில வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.தென்னரசு இன்று கொடியசைத்து துவக்கிவைத்தாா்.

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இந்நடவடிக்கை.

****

உதகை

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் வரும் ஏப்ரல் மாதம் மலர் கண்காட்சி நடைபெற உள்ள நிலையில் இதற்காக நாற்றுகள் நடவு செய்ய தற்போது விதை சேகரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மலர் கண்காட்சிக்காக பூங்காவை தயாா் செய்யும் பணிகள் துவங்கியுள்ளதாக எமது நீலகிரி செய்தியாளர் தொிவிக்கிறாா்.

வாய்ஸ்

****

இருவாி

தமிழகத்தில் மணல் குவாரி முறைகேடு தொடர்பாக 30 இடங்களில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் இன்று சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

நாகூர் கந்தூரி விழாவை முன்னிட்டு பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கேல்கர் சுப்பிரமணிய பாலசந்திரா இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டாா்.

பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மாவட்ட காவல்துறை சாா்பில் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டாா்.

சென்னையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெற்று வரும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிப்பு பொருட்களின் சிறப்பு விற்பனை கண்காட்சி இன்றுடன் நிறைவடைகிறது.

நாமக்கல் மாவட்டம் இலையாபுரம் கிராமத்தில் இன்று நடைபெற்ற சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில் கால்நடை வளர்ப்போருக்கு கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடனுதவிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்துதல், உள்ளிட்ட மருத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

****

<u>வானிலை</u>

தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை செங்கல்பட்டு காஞ்சிபுரம் மயிலாடுதுறை நாகை திருவாரூர் திருச்சி சேலம் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

****

<u>திருவண்ணாமலை</u>

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை தீப திருவிழா வரும் 15ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதற்காக கோபுரங்களை தூய்மை படுத்தும் பணிகளில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

****

<u>நெல்லை</u>

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் திருக்கோவிலில் திருக்கல்யாணம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

****

டென்னிஸ்

சென்னை ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் ராஜேஸ்வரன் ரேவதி – அமெரிக்காவின் ராபின் மான்ட்கோ மேரியை இன்று எதிர்கொள்கிறார்.

****

கிரிக்கெட்

இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

****